# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 310 / 2023

| Deposition of Witness for | Prosecution PW4<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Tmt. Senjiyammal |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22nd day of June, 2026.

( Accused is present )

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 15.27 மணி

நான் தற்போது சென்னை, பழவேற்காட்டில் வசித்து வருகிறேன். சிவரஞ்சினி என்னுடைய மகள். தேதி வருடம், மாதம் எனக்கு ஞாபகமில்லை. அது கொரானா காலம். என் மகள் சிவரஞ்சினி பாத்ரூமிற்கு முள்ளு காட்டிற்கு சென்றார். உப்பு

கழிக்காட்டை ஒட்டி சென்றார். அங்கு போய் வந்தபோது என் மகளை பன்னீர்செல்வம் கற்பழித்து துணி எல்லாம் கிழித்து துணியில்லாமல் என் மகளை கற்பழிக்கும்போது தண்ணீரில் என் மகளின் தலையை முக்கி விட்டு செத்துவிட்டார் என்று நினைத்து சென்றுள்ளார். எங்கள் ஊரில் உள்ள ஜெய்சங்கர் என்பவர் அந்த வழியாக சென்றுள்ளார். என் குழந்தையின் உடலில் ஆடையில்லை. உப்பு கழி கால்வாயில் இருந்த ஸ்கூல் யுனிபார்மை என் குழந்தை மாட்டிக்கொண்டு தள்ளாடி வந்துள்ளார். பின்னர் ஜெய்சங்கர் எங்களுக்கு தகவல் கூறினார். எனக்கு தகவல் கிடைத்தவுடன் பின்னர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

நான் மெதூரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக தகவல் கிடைத்தவுடன் நான் மெதூரில் இருந்து தான் வந்தேன் என்றால் சரிதான். என் மகள் துணியில்லாமல் இருந்தபோது துணி எடுத்து கொடுத்தேனா என்றால் அங்கம்மா என்பவர் துணி எடுத்து கொடுத்துள்ளார். அப்போது நான் உடன் சென்றேன். நானும், அங்கம்மா சென்று துணி எடுத்து கொடுத்தவுடன் என் மகள் வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான். மெதூரிலிருந்து கள்ளுக்கடைக்கு வருவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் 10 நிமிடத்தில் பைக்கில் வந்துவிட்டேன். ஒரு தம்பி பைக்கில் கொண்டு வந்துவிட்டார். மெதூரிலிருந்து கள்ளுக்கடைக்கு வருவதற்கு பஸ்டிக்கெட் எவ்வளவு என்றால் 15 ரூபாய். என் மகளுக்கு யார் யாரெல்லாம் துணி எடுத்து சென்றோம் என்றால் நானும், அங்கம்மாவும் சென்றோம். துணி கொடுக்கும்போது அந்த இடத்தில் ஜெய்சங்கர் இருந்தாரா என்றால் இல்லை. நானும், அங்கம்மா, என் மகள் சிவரஞ்சினி ஆகியோர் என் வீட்டிற்கு வந்துவிட்டு என் மகளை குளிப்பாட்டிய பிறகு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். என் மகள் அன்றைய தினம் என்ன உடைபோட்டிருந்தார் என்றால் நான் அங்கு இல்லை அதனால் எனக்கு தெரியாது. என் பெரிய மகள் பெயர் கன்னியம்மாள். அவரும் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். அவரின் கணவர் பெயர் சின்னராசு

என்றால் சரிதான். அவரும் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். ஜெய்சங்கர், சின்னராசு, ராஜா, ஆனந்த், அங்கம்மா, கன்னியம்மா ஆகியோர் சொந்தக்காரர்கள் என்றால் சரிதான். நான் ஊருக்கு வந்தவுடன் ஊர் ஜனங்கள் என் பெண்ணை அடித்துவிட்டதாக தகவல் கூறினார்களா என்றால் இல்லை. மெதூரில் சொல்லவில்லை. என் மகள் சிவரஞ்சினி மெதூரில் தான் இருந்தார். என் மகன் கார்த்திக் கள்ளுக்கடையில் இருந்தார். அவர் வீட்டில் என் மகள் சிவரஞ்சினி இருந்தார். முதலில் எந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் பழவேற்காட்டில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். எந்த ஊர் போலீசார் என்று எனக்கு தெரியாது. பழவேற்காடு அரசு மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எனக்கு பயத்தில் வெட வெடப்பில் மயக்கம் வந்துவிட்டது. ஆகவே மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் பழவேற்காடு மருத்துவமனைக்கு செல்லவில்லை. அதன்பிறகு என்றைய தினம் என் மகளை பார்த்தேன் என்றால் 5 நாட்கள் கழித்து தான் பார்த்தேன். அந்த 5 நாட்களும் பழவேற்காட்டில் என் மகன் கார்த்திக் வீட்டில் தங்கியிருந்தேன். என் மகள் சம்பவத்தன்றே சம்பவம் குறித்து அன்றே என்னிடம் கூறிவிட்டார். நேரம் சரியாக ஞாபகமில்லை. பன்னீர் செல்வம் யார் என்று எனக்கும் தெரியாது என் மகளுக்கும் சம்பவத்திற்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன நடந்தது என்று நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி கேள்விபட்டு தான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எதிரி பன்னீர் செல்வத்தை தற்போது தான் பார்க்கிறேன். மேற்படி சம்பவம் நடந்தது யாரும் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஊரில் பார்த்தார்கள். மேற்படி சம்பவம் குறித்து என்னை போலீசார் விசாரிக்கவில்லை. இந்த வழக்கு குறித்து போலீசாரிடம் எதுவும் கூறவில்லை. போலீசார் கேட்டவுடன் என் மகளின் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டது என்று கூறினேன். மேடம் வந்து கேட்டார்கள் என் மகள் வாழ்க்கையை நீங்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும் நான் படிக்கவில்லை என்று கூறினேன். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும்

நடைபெறவில்லை என்றாலும் என் மகள் ஒருவருடன் பேசிகொண்டிருந்ததை எதிரி பார்த்து ஊரில் கூறிவிட்டார் என்றாலும் அதனால் ஊர்காரர்கள் சிவரஞ்சினியை அடித்துவிட்டார் என்றும் அதை மறைப்பதற்கு எதிரி மீது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் மகளுக்கு தற்போது திருமணமாகி குழந்தைகள் உள்ளன என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 310 / 2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW5 |
| | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | Tmt. Angammal |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22nd day of June, 2026.

**( Accused is present )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 15.50 மணி

நான் தற்போது பழவேற்காடு கள்ளுக்கடை மேட்டில் வசித்து வருகிறேன். நான் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் தற்போது பணிபுரியவில்லை. என் பெரியம்மா மகள் பெயர் சிவரஞ்சினி. அவரை எதிரி கற்பழித்துவிட்டார். வீட்டில் பாத்ரூம்

இல்லை. Forest Office பக்கத்தில் காம்பவுண்ட் இருக்கும். அங்கு முள் செடி இருக்கும் அது பக்கத்தில் தான் பாத்ரூமிற்காக செல்வோம். அப்போது பன்னீர்செல்வம் பின்னால் இருந்து வந்து என் அக்காவை கெடுத்துவிட்டாக எங்கள் ஊரைச் சேர்ந்த ஜெய்சங்கர் அண்ணா கூறினார். அக்காவை தள்ளிவிட்டு, அடித்து ஆடைகளை கழித்து சேற்றில் போட்டு, அழுத்தி, மூக்கில் குத்தி, சாக்கைடையில் தள்ளி செத்துவிட்டார் என்று நினைத்து சென்றுவிட்டார். அக்கா அங்கிருந்த உடைகளை எடுத்து போட்டு வந்துவிட்டார். நாங்கள் போய் பார்த்தோம். என் அக்கா முகம் வீங்கியிருந்தது. நானும் பெரியம்மாவும் சென்று வீட்டிற்கு கூட்டிவந்தோம். பின்னர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். 23-04-2021 அன்று மேற்படி சம்பவம் பிற்பகல் 3.00 மணிக்கு நடந்ததுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. ஜெய்சங்கர் கூறி தெரியும். ஜெய்சங்கர் எங்களுடைய உறவினர் என்றால் சரிதான். என்னுடைய பெரியம்மா மகன். என் அக்காவுடன் நடந்த சம்பவம் குறித்து எங்கு கேள்விபட்டேன் என்றால் ஜெய்சங்கர் வீட்டின் அருகில் வந்து கூறினார். ஜெய்சங்கர் சொல்லும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் சுமார் 3.15 மணிக்கு வந்து கூறினார். ஜெய்சங்கர் என்ன கூறினார் என்றால் என் அக்காவை கற்பழித்துவிட்டார் வந்து பார் என்று கூறினார். போய் என் அக்காவை பார்த்தேன். என்னுடன் யாரெல்லாம் வந்தார்கள் என்றால் சிவரஞ்சினியின் அம்மா வந்தார்கள். சம்பவம் நடந்தபோது சிவரஞ்சினியின் தாயார் எங்கிருந்தார் என்றால் மெதூரில் இருந்தார். நாங்கள் வரவழைத்தோம். அவர்கள் பைக்கில் வந்துவிட்டார்கள். எப்போது சிவரஞ்சினியின் தாயார் வந்தார் என்றால் நேரம் எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கு சென்று என் அக்காவிற்கு துணி கொடுத்தேனா என்றால் இல்லை. அங்கிருந்த வேஸ்ட் துணியை எடுத்து போட்டிருந்தார். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன். அங்கு போலீசார் வந்திருந்தார்கள். போலீசாரிடம் என்ன நடந்தது என்று கூறினேனா என்றால்

அக்கா கூறினார். நானும் கூறினேன். மருத்துவமனையில் வைத்து விசாரித்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சிவரஞ்சினி, ஜெய்சங்கர், சின்னராசு, ராஜா, ஆனந்த், செஞ்சியம்மாள், கன்னியம்மாள், வினோதினி ஆகியோர் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் போலீசார் வந்து என் அக்காவிடம் ஏதாவது கையொப்பம் வாங்கினார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எவ்வளவு நேரம் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் நான்கொஞ்ச நேரம் இருந்தேன் பின்னர் என்னை வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார்கள். மருத்துவமனையில் என் அக்காவுடன் யார் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவயிடத்தில் என் அக்காவின் துணி ஏதாவது என் அக்கா இருந்த இடத்திற்கு அருகில் இருந்ததா என்றால் நான் அதெல்லாம் பார்க்கவில்லை என் அக்கா போட்டில் இருந்தது மட்டும் பார்த்தேன். போலீசார் விசாரணையில் என் அக்கா படகில் இருந்ததை பார்த்தாக கூறியுள்ளேனா என்றால் கூறினேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்என்றாலும் என் அக்கா படகில் இருந்ததை நான் பார்க்கவில்லைஎ ன்றால் சரியல்ல. என் அக்கா அடிபட்டு என் வீட்டிற்கு அருகில் வரும்போது ஜெய்சங்கர் அண்ணா பார்த்து என்னை அழைத்தார் என்றால் சரியல்ல. ஜெய்சங்கர் சம்பவதன்று என்ன நிற சர்ட் அணிந்திருந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஜெய்சங்கர் எங்கள் ஊர் தலைவர் என்றால் சரிதான். போலீசார் என்னை என்ன நடந்தது என்று என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் என் அக்கா ஒருவருடன் பேசிகொண்டிருந்ததை எதிரி பார்த்து ஊரில் கூறிவிட்டார் என்றாலும் அதனால் ஊர்காரர்கள் சிவரஞ்சினியை அடித்துவிட்டார் என்றும் அதை மறைப்பதற்கு எதிரி மீது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.
Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.